
TAMIL

NHS
Greater Glasgow and Clyde

மறைநிலை காசநோய் பற்றிய தகவல்கள்

(English)



மறைநிலை காசநோய் (TB) என்றால் என்ன?

மறைநிலை காசநோய் என்பது, உங்கள் உடலில் காசநோய் கிருமிகள் இருந்தாலும், உங்களுக்குச் தீவிரமான காசநோய் பாதிப்பு இல்லாத நிலையைக் குறிக்கிறது.

- காசநோய் கிருமிகள் உங்கள் உடலுக்குள் இருந்தாலும், உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலம் அவற்றை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.
- உங்களுக்கு எந்த அறிகுறியும் இருக்காது அல்லது உடல்நலக்குறைவாகவும் உணரமாட்டீர்கள்.
- நீங்கள் காசநோய் கிருமிகளை வேறு யாருக்கும் பரப்ப முடியாது.

மறைமுக காசநோயை, காசநோய் தொற்று, உறக்கநிலை காசநோய் அல்லது செயலற்ற காசநோய் என்றும் அழைக்கலாம்.

மறைநிலை காசநோயை எவ்வாறு கண்டறிவது?

மறைநிலை காசநோயை உறுதிப்படுத்த, டியூபர்குலின் தோல் பரிசோதனை மற்றும்/அல்லது இரத்தப் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் உள்ளன.

மறைநிலை காசநோய்க்கு ஏன் சிகிச்சை அளிக்க வேண்டும்?

- எதிர்காலத்தில் உங்களுக்குச் செயல்படும் நிலையிலான காசநோய் ஏற்படுவதைத் தடுக்க, மறைநிலை காசநோய்க்கு (latent TB) சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.
- பொதுவாக, காசநோய் கிருமிகள் உள்ளிழுக்கப்பட்டவுடன் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம் அவற்றை அழித்துவிடும். இருப்பினும், நோய் எதிர்ப்பு மண்டலம் பலவீனமடைந்திருந்தால், அக்கிருமிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் போகலாம். இது காசநோய் கிருமிகள் செயல்படத் தொடங்குவதற்கு வழிவகுக்கிறது.

இதற்கான சிகிச்சை என்ன?

மறைநிலை காசநோய்க்கான (latent TB) சிகிச்சையானது, பொதுவாக இரண்டு நுண்ணுயிர் எதிர்ப்பி மருந்துகளை (antibiotics) உள்ளடக்கிய ஒரு மாத்திரையை, 3 மாதங்களுக்குத் தினமும் உட்கொள்வதாகும்.

காசநோய் கிருமிகள் மிக மெதுவாகவே அழிக்கப்படுகின்றன; எனவே, நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic) சிகிச்சை முறையை முழுமையாக நிறைவு செய்வது மிகவும் முக்கியம். சிகிச்சையை முழுமையாக நிறைவு செய்யாவிட்டால், எதிர்காலத்தில் உங்களுக்குத் தீவிரமான காசநோய் (active TB) ஏற்படும் அபாயம் ஏற்படலாம்.

சிகிச்சைக்கு முன்னரும் சிகிச்சையின் போதும் உங்கள் கல்லீரல் இயல்பாகச் செயல்படுகிறதா என்பதைச் சரிபார்க்க, உங்களுக்கு ஒரு இரத்தப் பரிசோதனை தேவைப்படும்.



ரிஃபினா 150/100mg



ரிஃபினா 300/150mg



பைரிடாக்சின்
வைட்டமின் பி6

பக்க விளைவுகள் உள்ளனவா?

நீங்கள் இந்த நுண்ணுயிர் எதிர்ப்பி/ ஆன்டிபயாடிக் மருந்துகளை உட்கொள்ளும்போது, உங்கள் சிறுநீர், மலம், கண்ணீர் அல்லது வியர்வை ஆகியவை சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறத்தில் இருப்பதை நீங்கள் கவனிக்கலாம். இது ஒரு பாதிப்பில்லாத பக்க விளைவு ஆகும். மென்மையான காண்டாக்ட் லென்ஸ்கள் நிறமாற்றம் அடையலாம்.

ஆன்டிபயாடிக்குகள், கருத்தடை மாத்திரை மற்றும் பிற கருத்தடை முறைகளின் செயல்திறனைக் குறைக்கக்கூடும். எனவே, நீங்கள் ஆணுறை போன்ற நம்பகமான தடுப்பு முறையையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.
இது குறித்து உங்கள் குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனை, மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கலந்தாலோசிக்கவும்.

உங்களுக்கு இதுபோன்று ஏற்பட்டால், உங்கள் குடும்ப மருத்துவரிடம் தெரிவிக்கவும்:

- குமட்டல் அல்லது வாந்தி
- மஞ்சள் காமாலை (கண்ணின் வெள்ளைப்பகுதி அல்லது தோல் மஞ்சள் நிறமாக மாறுதல்)
- நீடித்திருக்கும் தோல் தடிப்பு அல்லது அரிப்பு
- காய்ச்சல்
- விரல்கள் மற்றும் கால் விரல்களில் கூச்ச உணர்வு

நினைவில் கொள்ளுங்கள்

- நீங்கள் தினமும் காலை உணவுக்கு 30 நிமிடங்களுக்கு முன் அந்த ஆன்டிபயாடிக் மருந்துகளை உட்கொள்ள வேண்டும்
- ஒரு வேளை மருந்தையும் தவறவிடாதீர்கள்
- மது அருந்துவதைத் தவிர்க்கவும்
- மருத்துவமனை சந்திப்புகள் அனைத்திலும் கலந்துகொள்ள முயற்சிக்கவும்

தவிர்க்கவும்

உங்கள் சிகிச்சையின் போது நீங்கள் சன் பெட்களைப் பயன்படுத்தக் கூடாது. உங்கள் சருமம் கடுமையான சூரிய ஒளியில் படும்போது, அதிக பாதுகாப்பு காரணி கொண்ட சன் கிரீமைப் பயன்படுத்தவும். (சில காசநோய் எதிர்ப்பு மாத்திரைகள் உங்கள் சருமத்தை சூரியக் கதிர்களுக்கு அதிக உணர்திறன் கொண்டதாக மாற்றக்கூடும்.)

கூடுதல் தகவல்:

உங்களுக்கு கூடுதல் தகவல் அல்லது ஆலோசனை தேவைப்பட்டால், உங்கள் உள்ளூர் காசநோய் செவிலியரைத் தொடர்பு கொள்ளவும்:

கிளாஸ்கோ ராயல் இன்ஃபர்மரி

Glasgow and Clyde East and North

☎ **0141 201 3900**

திங்கள் - வியாழன் காலை 9 - மாலை 6 (வெள்ளி மாலை 4:30)

கார்ட்னாவெல் பொது மருத்துவமனை

Glasgow and Clyde West

☎ **0141 232 2161**

திங்கள் - புதன் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை

குயின் எலிசபெத் யூனிவர்ஸ்சிட்டி மருத்துவமனை

Glasgow and Clyde South

☎ **0141 451 5862**

திங்கள் - புதன் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை

New Victoria Hospital

கிளாஸ்கோ மற்றும் கிளைட் வெஸ்ட்

☎ **0141 345 8846**

செவ்வாய் - வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை